**நவம்பர் - 10**

**"அன்பு... அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்."- 1கொரி 13:4,6.**

நியாயம், அநியாயம் இவைகளின் தத்துவங்கள் என்னுடைய மனதில் அவ்வளவு உறுதியாக நாட்டப்பட்டு நான் முற்றிலுமாக நியாயத்துக்கு இசைவாக இருந்து அதனால் அநியாயத்துக்கு அவ்வளவு எதிராக இருக்கிறதினால் எனக்கு அனுகூலமாக இருந்தாலும், நான் அநியாயத்தைத் தூண்டாதவனாய் ஆனால், கண்டனம் செய்ய வேண்டியவனாய் இருக்கிறேனா? நான் நியாயத்தோடும் சத்தியத்தோடும் அவ்வளவு இணக்கமாக இருக்கிறதினால், என்னுடைய முன்கூட்டியே கொண்ட அபிப்பிராயங்களில் சில நாசமானாலும், என்னுடைய உலகப்பிரகாரமான பாக்கியங்களுக்குப் பிரதிகூலமாக இருந்தாலும், சத்தியத்திலும் அதன் செழுமையிலும் நான் சந்தோஷப்படுவதைத் தவிர்க்கக் கூடாதவனாய் இருக்கிறேனா? கர்த்தருடைய பிள்ளைகளின் ஆவி என்று அப்போஸ்தலன் இங்கே விபரிக்கிற தேவனுடைய அன்பு, சுயநலத்தைப் பார்க்கிலும், மிகவும் மேலான ஒரு அன்பாகவும், உறுதியான தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டதாயும் இருக்கிறது. இந்தத் தத்துவங்களை நான் செய்யச் செல்ல, அதிகதிகமாகத் தெளிவாகக் கண்டு கொண்டு, என்ன விளைவு நேர்ந்தாலும், எப்பொழுதும் உறுதியாகப் பற்றிக் கொள்ளவேண்டும். **- P 03, 57 (R 3150).**

கோட்பாட்டிலும், அனுஷ்டானத்திலும், உண்மையின்மையாய் இருப்பதே அநியாயமாகும். அன்பு நல்ல தத்துவங்களில் சந்தோஷப்படுகிறதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறதினால், அநியாயத்தில் அநுதாபங்காட்டும் போதும், உலகத்தாருக்காக அவர்களுடைய அநியாயத்தில் பரிதாபப்படும்போதும், அநியாயத்தினால் அது நோகப்பண்ணப்பட்டு மனத்துயரத்துக்குள்ளாகுகிறது. சத்தியத்தில், அதன் கோட்பாட்டிலும் அனுஷ்டானத்திலும் சந்தோஷப்படுகிறதுக்கு ஒப்பாக அன்பு அதை வெறுக்கிறது. தேவனுடைய ஏற்பாடும் ஆவியும், விசுவாசத்திலும் நடத்தையிலுமுள்ள சகல நல்ல தத்துவங்களின் திரட்டாய் இருக்கிறதினால், அன்பு இவைகளில் சந்தோஷப்படாதிருக்கக் கூடாது. நல்ல தத்துவங்களிலும் காரியங்களிலுமுள்ள அதன் சந்தோஷத்தின் காரணமாக அது தத்துவங்களிலும், நோக்கங்களிலும், போராட்டங்களிலும், காரியசித்திகளிலும், வெற்றிகளிலும், சத்தியத்தின் ஆவியிலும் சந்தோஷப்படுகிறது. **- P 32, 167.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 10:3; ரோம 1:32; 2யோவா 4; நெகே 8:10-12; சங் 9:2; 13:5; 19:8; 40:16; 46:4;**

**89:15; 97:11,12; 119:1,16,55,111,165; ஏசா 12; எரே 15:16; எபி 10:34; 1பேது 1:8;**

**அப் 11:18,22,23.**

**கோபுர வாசிப்பு : Z ’02, 197 (R 3033).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் மகிழ்ச்சியடைந்தது அநியாயத்திலா அல்லது சத்தியத்திலா? ஏன்? எப்படி? பலன் என்ன?**